## மாவட்ட செயலாளரிடமிருந்து

வடமேல் மாகாணத்திற்குற்பட்ட இரண்டு மாவட்டங்களில் ஒன்றான புத்தளம் மாவட்டம் மிக நீண்ட வரலாற்றை கொண்ட மாவட்டமாகும். இந்நாட்டு அரசர்களில் முதல் அரசனான விஜயன் இலங்கைக்கு வந்திறங்கிய தம்பபன்னி என்ற பிரதேசம் இம் மாவட்டத்திலேயே அமைந்துள்ளது. இதன் மூலம் சிங்கள வம்சமானது இம்மாவட்டத்திலேயே ஆரம்பித்துள்ளது என்பது புலப்படுகிறது.

இம்மாவட்டத்தின் மொத்த நிலப் பகுதியானது 3072 சதுர கிலோ மீற்றராக காணப்படுகிறது. சிங்களவர், தமிழர் மற்றும முஸ்லிம் இனத்தவருடன் மலாய் இனத்தவர், பரங்கி இனத்தவர், செட்டி இனத்தவர், மலயாளி இனத்தவர் மற்றும் காபிரி இனத்தவர்கள் இங்கு வாழ்கின்றனர். மேலும், பௌத்த மதத்தவர்களினதும் இந்து மதத்தவர்களினதும் கௌரவத்திற்கு பாத்திரமான முன்னேஷ்வரம் ஆலயமும், கத்தோலிக்க மதத்தவர்களின் கௌரவத்திற்கு பாத்திரமான தலவில புனித அன்னம்மாள் தேவாலயமும் இம்மாவட்டத்தில் அமைந்துள்ளமை விசேட அம்சமாகும்.

நீல பெம்ம, இரதவி பெந்தி கால்வாய்கள் மற்றும் இங்கினிமிட்டிய போன்ற நீர்பாசன திட்டங்களாலும் இம்மாவட்டத்தின் விவசாயத் துறை போஷிக்கப்படுகிறது. மேலும், வென்னப்புவ தொடக்கம் கல்பிட்டி வரையிலான கடல் வளமானது மீன்பிடி துறையின் வளர்ச்சிக்கு பங்களிக்கின்றது. மேலும், புத்தளம் நகரத்தில் அமைந்துள்ள களப்பு எனப்படும் உவர் நீர் ஏரிப் பகுதியின் காரணமாக இம்மாவட்டமானது உப்பு உற்பத்தியில் பிரசித்துப் பெற்று விளங்குகிறது.

புத்தளம் மாவட்டமானது மிக கஷ்ட பிரதேசமாகவும், விவசாயத்தை நம்பி வாழும் மக்களைக் கொண்டதாகவும் காணப்பட்ட போதிலும் தற்போது இந்நிலை மாறி விவசாயம் மற்றும் கடற்றொழிலுக்கு பதிலாக சுற்றுலாத் துறை, மின் உற்பத்தி, போன்ற துறைகள் இம்மாவட்டத்திற்கு புதிதாக சேர்நத தொழில்களாக காணப்படுகிறது. கல்வி துறையில் மக்கள் வளர்ச்சியடைந்து வருவதோடு, நுரைச்சோலை அனல் மின்சாரம், காற்றுத்திறன் மின் உற்பத்தி நிலையம், சுற்றுலா தொழில் துறை மற்றும் கொழும்பு தொடக்கம் யாழ்ப்பாணம் வரையிலான பிரதான வீதி ஆகியவற்றின் நிர்மாணம் காரணமாக இம்மாவட்டம் விரைவான வளர்ச்சியினை அடைந்து வருகிறது என்பதனை சுட்டிக்காட்ட இதை சந்தர்ப்பமாக கருதுகிறேன்.

மாவட்டத்தின் நிருவாகாப் பணிகள் மாவட்ட செயலகம் மற்றும் 16 பிரதேச செயலகங்களின் ஊடாக நடைபெறுகிறது. இம் மாவட்டத்தில் வாழும் மக்களின் வாழ்க்கை தரத்தினை உயர் மட்டத்திற்கு கொண்டு வருவதுடன் இம்மாவட்டத்தின் அபிவிருத்திக்காக மேற்கொள்ளப்படும் அனைத்து வேலைத்திட்டங்களிலும் மாவட்ட செயலகமும், பிரதேச செயலகங்களும் தமது பங்களிப்பை நல்குகிறது.

2012 ஆம் ஆண்டில் மாவட்ட செயலகத்தின் மேற்பார்வையின் கீழ் பிரதேச செயலகங்கள் 16 ன் ஊடாக மேற்கொள்ளப்பட்ட பொது நிருவாகம் மற்றும் சமூக சேவைகள் தொடர்பான பணிகள், கலாசார விடயங்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்டுள்ள அபிவிருத்தி பணிகள் மற்றும் அதற்காக மேற்கொள்ளப்பட்ட செலவினங்கள் தொடர்பான முன்னேற்றங்களை பற்றிய விபரங்கள் அடங்கிய ஒரு ஏடாக இதனை குறிப்பிட முடியும்.

எம் கிங்ஸ்லி பர்னாந்து
மாவட்ட செயலாளர்
புத்தளம்

## அறிமுகம்

இலங்கை வம்ச கதைகளின் தாயகமாகிய புத்தளம் (தம்பபண்ணி) நீண்ட வரலாற்றினை கொணடுள்ள பூமியாகும். புத்தளம் மாவட்டம்; கடல் மட்டத்திலிருந்து 300 அடி தாழ்வான உயரத்தில் அமைந்திருக்குமோர் கரையோரப் பிரதேசமாகும். வடக்கே கலா ஓயாவினாலும்; கிழக்கே குருணாகல் மாவட்டத்தினாலும் தெற்கே மா ஓயாவினாலும்; மேற்கே இந்து சமுத்திரத்தினாலும் சூழப்பட்டு புத்தளம் நிர்வாக மாவட்டம் அமைந்திருக்கிறது. மாவட்டதினுடைய நீள அகலம் முறையே 120 மற்றும் 50 கிலோ மீற்றர்களாகும்.

நீளத்தால் 288 கிள.மீ கரையோரப் பகுதியையும் ;நன்னீர் நீர் நிலைகள் அடங்கலாக சுமார் 3013 சதுர கி.மி. நிலப்பகுதியையும் இம்மாவட்டம் கொண்டுள்ளது.{ சிங்களம், தமிழ், முஸ்லிம் ஆகிய பிரதான இனத்தவர்களுடன் மேலும், சிறுதொகையினராக மலே,பரங்கியர்,செட்டி,மலயாளி மற்றும் தென்னிந்திய வம்சாவளியினரான காபிரி இனத்தவர்களும் இங்கு வாழ்ந்து வருகின்றனர். பௌத்தம், இந்து, இஸ்லாம், மற்றும் கத்தோலிக ஆகிய இனத்தவர்கள் வாழும் இம்மவட்டத்தின் பெரும் பாண்மையினர் பௌத்த மத மக்களாகும். சிங்கள கத்தோலிக்கர்களின் பெரும் பகுதியினர் கரையோரத்தினையண்டிய பிதேசத்திலேயே வாழ்கிறார்கள்.

இம்மாவட்த்தில் 03 வகையான காலநிலை வலயங்கள் காணப்படுகின்றன. அவை மா ஓயாவிலிருந்து தெதுறு ஓயாவுக்கிடயே ஈர வலயமாகவும் தெதுறு ஓயாவிலிருந்து மாவட்டத்தின் வடக்கு எல்லைவரை மிகவும் வரண்ட வலயமாகவும் கல்பிட்டி தீபகற்பத்திலுள்ள மணல் மற்றும் மணற் திட்டுகளால் உள்ள பிரதேசம் மிதமான வரட்சியினை கொண்டதாகவும் அமைந்துள்ளது.

## வரலாற்றுப் முக்கியத்துவம்

மிகவும் பழமைவாய்ந்த சரித்திரத்திற்கு உரித்தாகிய பிரதேசமான புத்தளம் முன்னொரு காலத்தில் மங்கள தொடுபல என்றழைக்கப்பட்டதென வரலாறுகளில் இடம் பெற்றுள்ளது. சிங்கள அரசர்களில் முதல் மன்னனான விஜயன் இலங்கைக்கு வந்திறங்கியது புத்தளம் மாவட்டத்தில் அமைந்துள்ள தம்பபன்னி பிரதேசத்திலேயேயாகும். இதிலிருந்து புலப்படுவது சிங்கள வழித் தோன்றல்கள் புத்தளம் மாவட்டத்திலிருந்தே ஆரம்பமாகியுள்ளது என்பதாகும். மேலும் விஜயன் அரசனாவதற்கு உதவிபுரிந்ததாக கூறப்படும் குவேணி என்பவளின் இருப்பிடமும் இப்பிரதேசத்திலேயே இருந்துள்ளது. பிற்காலத்தில் விஜய அரசா் இந்தியாவிலிருந்து வரவழைக்கப்பட்டவேறொரு இளவரசியை திருமணம் செய்து கொண்டு குவேணியினையும் பிள்ளைகளையும் துரத்தி விட்டதனால், அங்கிருந்து சென்ற குவேணி தோணிகல பரமா கந்த எனும் இடத்தில் வாழ்ந்ததாக பழங்கதைகளில் கூறப்படுகின்றது. அப் பிரதேசத்திலேயே இலங்கையின் மிக நீண்ட கல் வெட்டும் காணப்படுகின்றது.. இது புத்தளம் மாவட்டத்தில் ஆனமடுவ பிரதேச செயலக பிரிவில் அமைந்துள்ளது.

விஜயன் அரசனால் குவேனியும் அவனுடைய பிள்ளைகளும் துரத்தியடிக்கப்பட்டதன் பிற்பாடு, குவேணி அவளுடைய உறவினர்களிடம் செல்வதற்கு முன்பாக தனது பிள்ளைகளின் பாதுகாப்பு கருதி ஆனமடுவ பிரதேசத்திலே அமைந்துள்ள தா்மபால எனும் இடத்தில் அவர்கள் தங்க வைக்கப் பட்டார்கள். பிள்ளைகள் இருந்த இடம் தா்மபாலய என்றானதாக வரலாறுகளில் இடம் பெற்றுள்ளது. முந்தய யுகத்தில் மங்கள தொடுபொல என்றழைக்கப்பட்டிருப்பினும் பிற் காலத்தில் புது +அலெவி ( புதிய உப்பளம் ) என்ற தமிழ் பெயர் மருவி புத்தளம் என பாவனைக்கு வந்தது.

இப்போதும் இலங்கை கடற் படையினரால் உபயோகிக்கப்படும் கல்பிட்டி ஒல்லாந்தர்கள் கோட்டை, 2ம் உலக மகா யுத்தத்தின் போது பாவிக்கப்பட்ட பாலாவி விமான நிலையம் இலங்கையினது சரித்திரத்துடன் நேரடியாகவே தொடர்புறும் தலங்கலாக இனங் காணலாம். வர்த்தக பொருட்களை புத்தளத்திற்கு எடுத்து வருதல் மற்றும் தேசிய உற்பத்திகளை கொழும்புத் துறைமுகத்திற்கு எடுத்துச் செல்லல் ஆகியவற்றை வல்லம் மற்றும் ஓடங்கள் ஊடாக மேற்கொள்வதற்கு ஒல்லாந்தா்களால் நிர்மாணிக்கப்பட்ட மூன்று படகு கால்வாய்களில் இரண்டு அமைந்திருப்பது புத்தளம் மாவட்டத்திற்குள்ளாகும். முற்காலத்தில்

இலங்கை பிரசித்துப் பெற்றதற்கு காரணியாக அமைந்த முருகைக்கற்பாறை அமைந்திருந்த கரையோரப் பிரதேசமும் இம் மாவட்டத்திற்கே சொந்தமாகும்.

துட்டகைமுனு மன்னனின் பிரதம பணியாளான நந்தமித்ரவின் பிரதேச ஆட்சிக்குள்ளான பள்ளம என்ற பிரதேசமும் இம்மாவட்டத்தினது பிரதேச செயலகப் பிரிவிலொன்றாகும். 05 அன்னங்களை கொண்ட அன்ன ஓவியம் காணப்படுவது ஆனமடுவ பிரதெசத்திலுள்ள புராதன பரமாகந்த ரஜ மகா விகாரையிலாகும். பௌத்த மற்றும் இந்து பக்தர்களின் நன்மதிப்பிற்கு பாத்திரமான முன்னேஸ்வரம் கோயிலானது இம்மாவட்டத்திலுள்ள சிலாபம் பிரதேச செயலாளர் பிரிவில் அமைந்துள்ளது. வரலாற்றின் படி தம்பதெனிய இராச்சிய யுகத்தில் குறிப்பிடப்பட்ட முனிசோம விகாரை இதுவாகுமென ஒரு கூற்றும் உள்ளது. தெதுறு ஓயா பிரதேசத்திலுள்ள அய்யனாகர் தேவாலயம் மாதம்பே தனிவெல்ல தேவாலயம் வராற்று ரீதியாக முக்கியத்துவம் வாய்ந்தவையாகும். கத்தோலிக்கர்களால் கௌரவிக்கப்படும் புராதன வழிபாட்டுத்தலமான தலவில புனித ஆனா தேவாலயம் புத்தளம் மாவட்டத்தில் கல்பிட்டி பிரதேச செயலக பிரிவிலேயே அமைந்துள்ளது.

சித்திரக் கலையில் முழு உலகத்தினது கவனத்தையும் ஈர்த்த களனி விகாரையின் சுவரோவியத்தின் சிற்பி சோலியஸ் மென்டிஸ், சிங்கள் இலக்கி கலையின் முன்னேற்றத்திற்கு பங்காற்றிய மேன்மை தங்கிய வணக்கத்திற்குரிய பிதா எட்மன்ட் பீரிஸ் , சைமன் நவகத்தேகம, விமலரத்ன குமாரகம போன்ற கலைஞர்களும் புத்தளம் மாவட்டத்திலிருந்தே தாயகத்திற்கு கிடைக்கப் பெற்ற கொடைகளாகும்.

துரித அபிவிருத்திக்கு உள்ளாகியுள்ள இம்மாவட்டத்தின் கரையோரத்திற்கு இணையாக செல்லும் கொழும்பு-அநுராதபுர வீதி காரணமாக போக்குவரத்து வசதிகளும் சிறந்த மட்டத்தில் உள்ளதென கூறமுடியும்.

## பொருளாதார பின்னணி

தெங்கு முக்கோண பிரதேசத்திற்குரித்தாகிய புத்தளம் மாவட்டமானது தெங்கு சார்ந்த உற்பத்தி பொருட்களினது ஏற்றுமதிகள் மூலம் இலங்கையின் பொருளாதார வளர்ச்சியில் பெரிதும் பங்கு வகிக்கிறது. அதேபோல் முன்னைய காலத்திலிருந்து காணப்படும் நீர்பாசண தொகுதிகளினால் நெற்பயிர்ச்செய்கை இங்கு வாழும் மக்களின் பிரதான வாழ்வாதாரமாக இருக்கிறது. மீ ஓயாவிற்கு குறுக்காக நிர்மாணிக்கப்பட்ட இங்கினிமிட்டிய நீர் தேக்கம், தப்போவ நீர் தேக்கம், கொட்டுககச்சி விவசாய குடியேற்றங்கள் காரணமாக இங்கு நெல் உற்பத்தி மிகவும் சிறந்த முறையில் செய்கை பண்ணப்படுகிறது. 150 கி.மீ நீள கரையோரத்தினை கொண்டுள்ள இம்மாவட்டம் உவர் நீர் சார்ந்த மீன் உற்பத்தியிலும் பெரும் பங்கு வகிக்கும் அதே வேளை வாவிகள், குளங்கள் சார்ந்த நன்னீர் மீன்பிடித் தொழில் காரணமாகவும் தேசிய பொருளாரத்தில் பெருமளவு பங்குவகிக்கிறது. கடற்கரையை அண்டிய உவர் நீர் ஏரிப்பகுதிகள் இறால் பண்ணைச் செய்கைகளுக்கு உகந்ததாதலால் அந்நியசெலாவணிகளும் கிடைக்கப் பெறுகிறது. தீவுகள் பலவற்றைக் கொண்டிருக்கும் கல்பிட்டி, மற்றும் வண்ணாத்திவில்லு பிரதேசம் கருவாட்டு உற்பத்தியில் பிரசித்து பெற்று விளங்குகிறது. பிரதான உப்பளங்கள் அமைந்திருப்பது புத்தளம் உவர் நீர் ஏரியினை அண்மித்த பகுதியிலாகும்.

கல்பிட்டி பிரதெசத்தில் நிலக்கீழ் நிரினை உபயோகித்து செழிப்பான மரக்கறிச் செய்கை நடைபெறுகிறது. சிறிய வெங்காயம், மிளகாய், புகையிலை அதே பொன்று கோவா பீட்றூட், கெரட், கெக்கரி, பூசணிக்காய், வத்தப்பழம், தக்காளி, பப்பாசி,, கிலோ கொய்யா, ட்ரெகன் ப்ருட் செய்கையின் மூலம் விவசாயத்துரைக்கு பங்களிப்பினை வழங்குகிறது.

ஆரச்சிக்கட்டுவ, வணாத்தவில்லு பிரதேசங்களில் மரமுந்திரிகைச் செய்கையும், புத்தளம், கல்லடி, வண்ணாத்திவில்லு, இறால்மடுவ பிரதேசங்களில் பப்பாசி, தோடை போன்ற பயோ்ச் செய்கைகளையும் காணலாம்.

வண்ணாத்திவில்லு அறுவாக்காடு பகுதியில் சீமெந்து உற்பத்திக்கான சுண்ணாம்பு கனியப் பொருட்கள் படிவஙகள் நிறைந்து காணப்டுவதன் காரணமாக புத்தளம் பிரதேசத்தில் சீமெந்து உற்பத்திச் சாலை அமைக்கப்பட்டிருப்பதோடு, ஓடுகள் உற்பத்திக்கு தேவையான கனிய

வளங்கள் காணப்படும் வென்னப்புவ , தங்கொட்டுவ பிரதெசங்களில் அமையப்ப பெற்றிருக்கும் ஒடு உற்பத்தியின் காரணமாக கட்டிட நிர்மாணத் துறைக்கும் பெருமளவு பங்காற்றுகிறது.
இந் நாட்டின் முக்கியமான இரண்டு சரணாலயங்கள் இரண்டில் ஒன்றாக கருதப்படும் வில்பத்து சரணாலயம், கல்வித் துறையில் முக்கியம் பெற்று விளங்கும் பறவைகள் சரணாலயமாக பிரகடனப்படுத்தப்பட்ட ஆணவிலுந்தாவ பறவைகளின் சுவர்க்கப்புரி ஆகியவற்றின் காரணமாக வந்து போகும் சுற்றுலா பயனிகளுக்காக ரண்வெலி, டொல்பின் க்லப், பாம்பே போன்ற சுற்றுலா ஹோட்டல்கள் அமைக்கப்பட்டுள்ளதுடன் கல்பிட்டி பத்தலங்குன்று பிரதேசத்திலும் சுற்றுலா ஹோட்டல்கள் சில அமைக்கப்பட்டு வருகின்றது. இவற்றின் காரணமாக புத்தளம் மாவட்டத்தின் சுற்றுலா தொழிலானது நாட்டின் பொருளாதாரத்திற்கு பெரும் உதவியாக அமைகிறது.

## மாவட்ட நிருவாக அமைப்பு.

வடமேல் மாகாணத்திற்குள் இரண்டு மாவட்டங்கள் அமையப்ப பெற்றுள்ளதுடன் அதில் ஒன்று புத்தளம் மாவட்டமாகும். 16 பிரதேச செயலகங்கள் ஊடாக மாவட்டத்தின் நிருவாகத்தினை மேற்கொள்ளப் படுகிறது.

01. வென்னப்புவ
02. நாத்தாண்டி
03. சிலாபம்
04. ஆராச்சிகட்டு
05. புத்தளம்
06. கல்பிட்டி
07. வண்ணாத்திவில்லு
08. கருவலகஸ்வெவ
09. நவகத்தேகம
10. ஆணமடுவ
11. மகாகும்புக்கடவல
12. தன்கொட்டுவ
13. மாதம்பே
14. பல்லம
15. முந்தல்
16. மகாவெவ

இந்த பிரதேச செயலகங்கள் அனைத்தும் உள்ளடங்கப்பெற்றவாராக 548 கிராம அலுவலா் பிரிவுகள் காணப்படுகிறது. கிராம அலுவலா் பிரிவுகளுக்குட்பட்ட கிராமங்களின் எண்ணிக்கை 1,273 ஆகும். புத்தளம் மாவட்டத்தில் 2012ம் வருடத்தில் வாக்காளா்களின் எண்ணிக்கையானது ஆண்கள் 254,302 ஆகவும் பெண்கள் 272,106 ஆகவும் காணப்பட்டது. புத்தளம் மாவட்டத்தில் தோ்தல் தொகுதிகள் 05 காணப்படுகிறது. அவையாவன புத்தளம், சிலாபம், ஆணமடுவ, நாத்தாண்டி மற்றும் வென்னப்புவ என்பவையாகும். மாவட்டத்தில் அனைத்து கட்சிகளில் இருந்தும் தோ்ந்தெடுக்கப்பட்ட உருப்பினா்களின் எண்ணிக்கை பின்வருமாறு அமைகிறது.

| | |
|---|---|
| பாராளுமன்ற உருப்பினா்கள் | 08 |
| மாகாண சபை உருப்பினா்கள் | 17 |

மாவட்டத்தினுள் நகர சபைகள் இரண்டும் (02) பிரதேச சபைகள் பத்தும் (10) உள்ளதுடன் அவற்றுக்கு அனைத்து கட்சிகளில் இருந்தும் தோ்ந்தெடுக்கப்பட்ட உருப்பினா்களின் எண்ணிக்கை பின்வருமாறு உள்ளது.

| மாகாண சபை நிறுவனங்கள் | உருப்பினர்களின் எண்ணிக்கை |
|---|---|
| புத்தளம் நகர சபை | 09 |
| சிலாபம் நகர சபை | 11 |
| புத்தளம் பிரதேச சபை | 09 |
| கல்பிட்டி பிரதேச சபை | 14 |
| வண்ணாத்திவில்லு பிரதேச சபை | 10 |
| கருவலகஸ்வெவ பிரதேச சபை | 10 |
| நவகத்தேகம பிரதேச சபை | 09 |
| ஆணமடுவ பிரதேச சபை | 16 |
| ஆராச்சிகட்டு பிரதேச சபை | 12 |
| சிலாபம் பிரதேச சபை | 17 |
| நாத்தாண்டி பிரதேச சபை | 22 |
| வென்னப்புவ பிரதேச சபை | 22 |


புத்தளம் மற்றும் சிலாபம் பிரதேசங்களில் சுற்றுலா மற்றும் விடுமுறை விடுதிகள் இரண்டு காணப்படுவதுடன் மாவட்டத்தினுள் மாவட்ட செயலகத்திற்கு சொந்தமான அரசாங்க விடுதிகள் 74 அமைந்துள்ளது. இம்மாவட்டத்தில் 16 பொலிஸ் நிலையங்களின் ஊடாக மாவட்டத்தின் சமாதானத்தினையும் பாதுகாப்பினையும் உருதிப்படுத்தப் படுகிறது. மாவட்டத்தில் புத்தளம் மற்றும் சிலாபம் ஆகிய இரு கல்வி வலயங்கள் காணப்படுவதுடன், அவற்றின் கீழ் 348 பாடசாலைகள் அமைக்கப்பட்டுள்ளது. இப்பாடசாலைகளில் 7,643 ஆசிரியர்களும் 159,155 மாணாக்களும் இருக்கின்றனர். ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் இடையிலான விகிதாசாரம் 20.8 ஆகும். மேலும், கல்வி மட்டமானது 91.9 வீதமாக காணப்படுகிறது.

புத்தளம் மாவட்டத்தின் மக்கள் தொகையானது 759,720 ஆக உள்ளதுடன் அதில் ஆண்கள் 368,844 ஆகவும் பெண்களின் எண்ணிக்கை 390,876 ஆகவும் காணப்படுகிறது. இலங்கையின் மொத் மக்கள் தொகையினருடன் ஒப்பிடுகையில் இம்மாவட்டத்தின் மக்கள் தொகையின் சதவீதமானது 3.7 ஆக உள்ளதுடன் மக்கள் தொகையினரின் அதிகரிப்பு வீதமானது 7ஆக காணப்படுகிறது. மாவட்டத்தில் உள்ள மக்கள் தொகையினரில் 72% வீதமானோர் சிங்ளவர்களாவும், 6% வீதமானோர் தமிழர்களாகவும், 19% வீதமானோர் முஸ்லிம்களாகவும், 0.2% வீதமானோர் பர்கர்களாகவும் 0.3% வீதமானோர் ஏனையவர்களாகவும் காணப்படுகின்றனர். தாய் மற்றும் சேய் மரண விகிதாசாரமானது மிக குறைந்த மட்டத்திலேயே காணப்படுகிறது.

மாவட்ட செயலகம் – புத்தளம்

அனுமதிக்கப்பட்ட பதவியணியினர்

| தொகுதி | அனுமதிக்கப்பட்ட அலுவலர் குழாம் | உண்மையான அலுவலர் குழாம் | வெற்றிடம் / மேலதிகம் |
|---|---|---|---|
| சிரேஷ்ட நிலை | - | - | - |
| மூன்றாம் நிலை | 54 | 37 | 17 |
| இரண்டாம் நிலை | 1020 | 753 | 267 |
| ஆரம்ப நிலை | 168 | 168 | - |
| ஏனைய<br><br>( அமைய/ தற்காலிக / ஒப்பந்த ) | - | 5 | 5 |
| மொத்தம் | 1242 | 963 | 289 |




புத்தளம் மாவட்ட செயலம் – அலுவலக கட்டமைப்பு வரைபு

# மாவட்ட செயலகம்

புத்தளம் நகர மையத்தில் மாவட்ட செயலகம் அமையப்பெற்றுள்ளது. நிருவாகத்தினை ...... செய்தலின் ஊடாகவும் அதிகாரமளிக்கப்பட்ட ஏனைய பொருப்புக்கள் ஆகியவற்றினை நோக்கும் போது நிருவாகத்தின் அதிக பகுதியானது மாவட்ட செயலகத்தின் ஊடாக நடைபெறுகிறது. மாவட்ட செயலக வலாகத்தினுள் பல்வேறு திணைக்களங்களுக்குட்பட்ட அலுவலக தொகுதி ஒன்றும் அமையப் பெற்றுள்ளது. அவையாவன, மாவட்ட சமுர்த்தி அலுவலகம், உதவி தேர்தல் அலுவலகம், அரச கணக்காய்வு அலுவலம், மாவட்ட திட்டமிடல் அலுவலம், காணிகள் பயன்பாட்டு அலுவலகம், இலங்கை வங்கி கச்சேரி கிளை, மாகாண காணி ஆணையாளர் அலுவலகம், வடமேல் மாகாண பிரதம செயலாளர் ஒருங்கிணைப்பு அலுவலகம், மேலதிக மாவட்ட பதிவாளர் அலுவலகம்,செய்தித் தாள் அலுவலகம், இடர் முகாமைத்துவ அலுவலகம், சமூக பாதுகாப்பு சபையின் கிளை அலுவலகம், சிறுதொழில் அலுவலம், மோட்டார் பரிசோதகர் அலுவலகம், புள்ளிவிபரவியல் மற்றும் உப தபால் அலுவலகம் கச்சேரி கிளை ஆகியனவாகும்.

நிருவாக பகுதியினால் மாவட்ட செயலகத்தின் அனைத்து தொழிற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டு வருவதுடன் அவற்றுக்கு மேலதிகமாக பின்வரும் பெருமளவிலான பணிகளையும் அது மேற்கொள்கிறது.

- பிரதேச செயலகங்களின் பொது நிருவாகம்
- விவசாய அலுவல்கள்
- பௌத்த மற்றும் கலாச்சார அலுவல்கள்
- உயர் அதிகாரிகளின் செயலாற்றுகை பற்றிய மதிப்பீடு
- சமூக சேவைகள் தொடர்பான பணிகள்
- படையினரின் நலன்புரி பணிகள்
- புகையிரத அனுமதிச் சீட்டு மற்றும் பலா மரங்களை தரிப்பதற்கான அனுமதி பத்திரம் வழங்குதல்
- தேர்தல் தொடர்பான பணிகள்
- செயல்முறை சார்ந்த பயிற்சி நெறிகள் மற்றும் மொழி பயிற்சி வகுப்புக்களை ஏற்பாடு செய்தல்
- பிறப்பு, விவாக மற்றும் மரண பதிவாளர்களையும், திடீர் மரண விசாரணை அதிகாரிகளையும் நியமனஞ் செய்தல்
- கிராம அலுவலர்களின் பணிகள்
- அனைத்து ஒழுக்காற்று நடவடிக்கைகள் மற்றும் சுற்றறிக்கை கோவைகளை பேணுதல்
- மாவட்ட சூழல் அபிவிருத்தி பணிகள்
- அரச பொது விடுதிகள் தொடர்பான பணிகள்
- கட்டிட ( அபிவிருத்தி ) பணிகள்
- விலை கட்டுப்பாட்டு மற்றும் அளவை நிறுவை தொடர்பான அலுவல்கள்

1996ம் ஆண்டில் மாவட்ட செயலகமானது "ஏ" தர திணைக்களமாக்கப்பட்ட பின் 625ம் இலக்க செலவின தலைப்பின் கீழும், 2000 ஆம் ஆண்டு முதல் 2006 ஆம் வரை 837ம் இலக்க செலவின தலைப்பின் கீழும், 2007ம் ஆண்டு முதல் 273 ஆம் இலக்க செலவின தலைப்பின் கீழும் கணக்கு பகுதி தணியான ஒரு பகுதியாக செயல்பட்டு வருகிறது. பணிகளை இலகு படுத்துவதற்காக அது பிரதான பகுதிகள் இரண்டாக பிரிக்கப்பட்டுள்ளது.

- மாவட்ட செயலக கணக்கு பகுதி
- கட்டுப்பாட்டு கணக்கு பகுதி

மாவட்ட செயலக கணக்கு பகுதியின் ஊடாக மாவட்ட செயலகத்திற்கு கிடைக்கப்பெற கூடிய எல்லா கிடைப்பணவுகளும், அனைத்து செலவினங்களும் தொடர்பாக அலுவல்கள் மேற்கொள்ளப் படுகிறது. இதற்கு மேலதிகமாக திட்டமிடல், புள்ளிவிபரவியல், சமுர்த்தி, சிறுகைத்தொழில் போன்ற அலுவலகங்களின் கொடுப்பணவுகளும் மேற்கொள்ளப்படுகிறது.

கட்டுப்பாட்டு கணக்குப் பகுதியானது பிரதேச செயலகங்களின் நிதி விடயங்கள் தொடர்பாக மேற்பார்வை செய்கிறது. அப்பணிகள் பின்வருமாறு அமைகிறது.

- வருமானம், செலவினம் மற்றும் முற்பணம் தொடர்பான வருடாந்த மதிப்பீட்டறிக்கைகளை தயாரித்தல்
- பிரதேச செயலகங்களுக்கான பாதீடுகளை வழங்குதல்
- பிரதேச செயலகங்களில் இருந்து வருடாந்த காசு பாய்ச்சல் கூற்றுகளை பெற்று ஒன்றினைத்து அரச கணக்குகள் திணைக்களத்திற்கு சமர்பித்தல்.
- திரைசேறியின் கணனி அறிக்கைகளை பெற்று, ஒப்பீடு செய்து ஏனைய அமைச்சுக்களுக்கு அறிக்கை சமர்ப்பித்தல்
- வருடாந்த ஒதுக்கீட்டுக் கணக்கு, முற்பணக் கணக்கு மற்றும் அனைத்து கட்டுப்பாட்டுக் கணக்குகள் ஆகியவற்றை தயாரித்தல்
- துப்பாக்கிகள் வெடி மருந்துகளுக்கான அனுமதி பத்திரங்கள் வழங்குதல் மூலமாக வருமானத்தினை சேகரித்தல்.
-

2012 ஆம் ஆண்டின் மாவட்ட செயலகத்தின் செயற்பாடுகளை பிரதான பகுதிகள் 4ன் கீழ் பிரித்து காட்ட முடியுமாக உள்ளது.

- பொது நிருவாகம்
- கலாசார மற்றும் சமூகப் பணிகள்
- அபிவிருத்தி பணிகள்
- வருடாந்த கணக்குகளின் சாராம்சம்

## பொது நிருவாகம்

2012 ஆம் ஆண்டு புத்தளம் மாவட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட பாதீடு மற்றும் அதனூடாக மேற்கொள்ளப்பட்ட செலவினங்கள் தொடர்பான சுருக்க குறிப்பு பின்வருமாறு.

### (1) மீண்டுவரும் செலவினம்

| | பாதீடு | செலவினம் | மீதி |
|---|---|---|---|
| ♣ மாவட்ட செயலகம் | | | |
| 1. பொது நிருவாகம் | 85,103,679.00 | 83,539,240.00 | 1,564,439.00 |
| 2. மூலதன செலவு | 101,800,000.00 | 62,402,006.00 | 39,397,994.00 |
| ♣ பிரதேச செயலகங்கள் | | | |
| 1. பொது நிருவாகம் | 358,631, 2,999, 227.00 | 047.00 | 355, 631,820.00 |
| 2. மூலதன செலவு 45, | 400, 724.00 | 000.00 | 354,276.00 |

### (2) ஓய்வூதியம் வழங்கள்

2012 ஜனவரி ( தை ) மாதம் முதல் டிசம்பர் ( மார்கழி ) மாதம் வரை

| | |
|---|---|
| சிவில் | 281,508,278.17 |
| விதவைகள் ஓயவூதியம் | 51,596,137.87 |
| மாகாண நிருவாகம் | 1,089,050.62 |

### (3) வருமாணம் சேகரித்தல்

| | |
|---|---|
| 1. பல்வேறு அனுமதி பத்திரங்கள் துப்பாக்கி அனுமதி பத்திர கட்டணங்கள் | -ரூ |
| 2. அரசாங்க கட்டிடங்களில் இருந்து பெறப்படும் வருமாணம் | -ரூ 1,364,720.00 |
| 3. அரச உத்தியோகத்தர்களுக்கு கடன் வழங்குதல் மூலம் பெறும் வட்டி | -ரூ 5,771,947.00 |
| 4. தண்டப்பணம் மற்றும் அரச உடமையாக்கள் | -ரூ 11,921,892.00 |
| 5. நிருவாக ரீதியான கட்டணங்கள் | -ரூ 2,073,721.00 |
| 6. ஏனைய கிடைப்பணவுகள் | -ரூ 10,052,323.00 |

## (4) உள்ளக கணக்காய்வு பணிகள்

முறையான அரச நிதி முகாமைத்துவ தொகுதியொன்றை அமைப்பதற்காக உள்ளக கணக்காய்வு பகுதி தாபிக்கப்பட்டது. இப்பகுதியானது நிறுவனத்தின் நிதி மற்றும் கணக்குகள் தொடர்பாகவும் ஏனைய பணிகளை சேவைகளை மேற்கொள்வதுடன் திணைக்கள தலைவருக்கு நேரடி பொறுப்பு கூறப்பட வேண்டியுள்ளது.

உள்ளக கணக்காய்வு பகுதியினால் திணைக்களத்தின் காசு தொடர்பான உள்ளக கட்டுப்பாட்டு முறைமைகளை ஆராய்ந்து அதனூடாக அலுவலகத்தில் நடைபெறக் கூடிய தவறுகள், மோசடிகள் போன்றவற்றை தவிர்க்கவும், கண்டுபிடிக்கவும் பயன்படுத்தப்படும் உள்ளக கட்டுப்பாட்டு முறைமைகளை பரிசீலித்து அது முறையானதாகவும் போதுமானதாகவும் உள்ளதா என்பதை பற்றி தொடர்ச்சியான ஆய்வினையும் சுதந்திரமான மதிப்பீட்டினையும் மேற்கொள்கிறது. மேலும், நிறுவனத்தின் அபிவிருத்தி திட்டங்களை நடைமுறை படுத்தல் மற்றும் அதன் முன்னேற்றத்தை மதிப்பீடு செய்தல் ஆகிய பணிகளுக்காக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு உதவுதல். அந்த வகையில் 2012 ஆம் ஆண்டு பின்வரும் பிழைகள் மற்றும் குறைப்பாடுகள் கண்டுக்கொள்ளப்பட்டது.

- பிரதேச செயலகங்களில் உள்ளக கட்டுப்பாட்டு துறையில் காணப்பட்ட குறைப்பாடுகளை சீர் செய்ய அறிவுறை வழங்கப்பட்டது.
- கொடுப்பணவு செய்யப்பட்ட உறுதிச் சீட்டுக்களில் காணப்பட்ட குறைப்பாடுகளை திருத்துவதற்கான அறிவுறைகள் வழங்கப்பட்டது.
- அறவிடப்படாத அனுமதிபத்திர கட்டணங்கள் பற்றி சுட்டிக்காட்டப்பட்டதுடன் அவற்றை மீள அறவிடுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது.
- சுயவிபர கோவை மற்றும் ஏனைய தாபன பணிகள் தொடர்பில் காணப்பட்ட குறைப்பாடுகளை சுட்டிக்காட்டப்பட்டது.
- தின ஓட்டப்பதிவேடு மற்றும் எரிபொருள் பாவனை தொடர்பான குறைப்பாடுகளை சுட்டிக்காட்டி அவற்றை சீர் செய்ய அறிவுறை வழங்கப்பட்டது.

## (5) மனித வள அபிவிருத்தி

மனித வள அபிவிருத்தியினை முன்னிட்டு புத்தளம் மாவட்ட செயலக மனித வள அபிவிருத்தி உத்தியோகத்தர்களினால் பின்வரும் நிகழ்ச்சித்திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளது.

| நிகழ்ச்சித்திட்டம் | பயனாளிகள் எண்ணிக்கை | செலவு |
|---|---|---|
| 1. தொழில் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் | 33 | 14,610 |
| 2. தேவைகள் கருதிய பயிற்சி திட்டங்கள் | 115 | 27,250 |
| 3. தனியார் துரைகளில் தொழில்வயப்படுத்தல் | 60 | 12,000 |
| 4. சுதந்திர தொழில் துறைகளுக்கு தூண்டும் நி.திட்டம் | 33 | 11,460 |
| 5. சுயதொழில்களுக்கு தூண்டும் நிகழ்ச்சித்திட்டம்288 | 12,690 | |
| 6. வெளிவாரி பட்டதாரிகளுக்கான நிகழ்ச்சித்திட்டம் | 35 | 16,812 |
| 7. தொழில் சங்க நிகழ்ச்சிதிட்டங்கள் | 90 | 62,100 |
| 8. தொழில்சார் திட்டங்களை வெற்றிக் கொள்ளல் | 96 | 14,630 |

## (6) ஊடகங்கள் மற்றும் செய்திகள்

மாவட்ட ஊடக பகுதியினால் 2012ம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் பின்வருமாறு.

- ஜனாதிபதி தலைமையில் நடந்த புத்தளம் மாவட்ட ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தின் அறிக்கையனை தயார் செய்தல்
- பத்திரிகையாளர் மன்றத்தினால் பிராந்திய ஊடகவியலாளர்களுக்காக வேலைபட்டறைகள் நடாத்தல்
- வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தினால் நடாத்தப்பட்ட வேலைபட்டறைகள்
- சமூக தூய்மையாக்கள் தொடர்பான வேலைபட்டறை
- தெசத்திய என்ற சஞ்சிகை மூலம் பாடசாலை பிள்ளைகளுக்கான ஊடக கருத்தரங்கு
- அகில இலங்கை சமய பாடசாலைகளின் போட்டிகளின் ஊடக இணைப்பாளர்களாக பணியாற்றல்
- மாவட்ட அபிவிருத்தி பணிகள் பற்றிய தகவல்களை வழங்குதல் மற்றும் நூல் அச்சிடுதல் மற்றும் புத்தகங்கள் தயாரித்தல்
- அரசியல் மற்றும் தற்கால ஊடக பாவனை / இலங்கையின் சுற்றுலா தொழில் எதனை நோக்கி போன்ற கருத்தரங்குகள்
- வன்முறை மற்றும் தேசிய பாதுகாப்பு பற்றிய கருத்தரங்கு / அழகுணர்ச்சி நிகழ்ச்சிகள்
- 2012 ஆம் ஆண்டில் சுமார் 50 செய்திதாள் அறிக்கைகள் ஊடகத்திற்கு வெளியிடுதல்
- திறனாய்வு அறிக்கைகள் தயாரித்தல்
- அனைத்து தேர்தல்கள் தொடர்பான ஊடக இணைப்பு பணிகள்
- மாவட்டத்தின் அனைத்து அபிவிருத்தி பணிகள் தொடர்பான பிரசார பணிகளை மேற்கொள்ள

## (7) காணிகள் பதிவு செய்தல்

காணிகள் பதிவாளர் அலுவலகத்தினால் 2012ம் ஆண்டு பதிவுகள் மேற்கொள்ளப்பட்ட பொதுவான காணி உறுதிச்சீட்டுகளின் எண்ணிக்ளை 13,448 ஆகும். மேலும் ஐயபூமி காணி உறுதிச் சீட்டுகளின் எண்ணிக்கை 220 ஆகும்.

## (8) அனர்த்த முகாமைத்துவ பணிகள்.

மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பகுதியினால் 2012ம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட சமூக அடிப்படை விழிப்புணர்வூட்டல் மற்றும் திடீர் ( விரைவான ) துலங்கள் தொடர்பான நிகழ்ச்சித்திட்டங்கள் பின்வருமாறு.

சுனாமி ஒத்திகை நிகழ்ச்சித்திட்டம்

| | |
|---|---|
| முந்தல் பள்ளிவாசல்பாடு | 2012.04.26 |
| வெரலவெல்ல (கடற்கரை) சிலாபம் | 2012.06.22 |
| நாரக்கள்ளி கல்பிட்டி | 2012.07.20 |
| வட்டக்கள்ளி சிலாபம் | 2012.07.26 |
| தொடுவாவ மத்தி மஹவெவ | 2012.08.10 |
| பூனபிட்டிய முந்தல் | 2012.08.17 |
| கல்பிட்டி மண்டலக்குடா | 2012.09.17 |
| டச்பே கல்பிட்டி | 2012.09.14 |
| பத்தலன்குன்டு கல்பிட்டி | 2012.10.19 |

## விழிப்பூட்டல் நிகழ்ச்சித்திட்டம்

- அணைக்கட்டுகளை பாதுகாத்தல் – இங்கினிமிட்டிய நீர்த்தேக்கம் - நவகத்தேகம பிரதேச செயலாளர் பிரிவில் 10 கிராம நிலதாரி ( உத்தியோகத்தர் ) பிரிவுகளில் விழிப்பூட்டல் நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டது.
- நவகத்தேகம் மற்றும் கருவலகஸ்வெவ பிரதேச செயலகங்களுக்குட்பட்ட 5 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் யானைகளினால் நேரும் தீங்குள் பற்றி விழிப்பூட்டல் நிகழ்த்தப்பட்டது.
- இயற்கை அனர்த்தங்கள் பற்றி 10 விழிப்பூட்டல் நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டது.
- பாடசாலைகளை பாதுகாத்தல் மற்றும் விழிப்பூட்டல் தொடர்பான 18 நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டது
- ஏனைய நிறுவனங்களை விழிப்பூட்டல் மற்றும் பயிற்சியளித்தல் நிகழ்ச்சிகள் 12 நடாத்தப்பட்டது.

## டெங்கு ஒழிப்பு திட்டங்களுக்கு பங்களிப்பனை வழங்குதல்

| | |
|---|---|
| அரச உத்தியோகத்தர்கள் | 3,910 |
| சமூகத்தினரின் பங்களிப்பு | 8,653 |

## விசேட நிகழ்வுகள் மற்றும் உடனடி துளங்கள் தொடர்பான அலுவல்கள்

| | |
|---|---|
| காட்டு யானைகளின் தாக்குதல் | 02 |
| காட்டு யானைகள் தாக்கி இறந்து போதல் | 01 |
| காட்டு யானைகளினால் தாக்கப்பட்டு சேதமடைந்நத வீடுகள் | 01 |
| இடி தாக்கி சேதமடைந்த வீடுகள் | 01 |
| கடும் காற்றினால் சேதமடைந்த வீடுகள் | 15 |
| காடுகள் தீ பற்றிக் கொள்ளல் | 08 |

வரட்சியினால் பாதிக்கப்பட்ட பாதிக்கப்பட்ட 10 பிரதேச செயலக பிரிவுகளுக்கு குடி நீர் பகிர்ந்தளித்தல்

எரிவாயு கசிவு காரணமாக 18 பேர் மருத்துவமனையில் சேர்பித்தல்

வெள்ளப் பெருக்கு காரணமாக இறந்து போதல்

வெள்ளப் பெருக்கு காரணமாக வீடுகள் சேதமடைதல் முழுமையாக
பகுதியாக

முழுமையாக சேதமடைந்த வீடுகளுக்காக குடில்கள் அமைத்தல்

## அனர்த்தங்களை குறைப்பதற்கான திட்டங்கள்

| | |
|---|---|
| வெள்ளப்பெருக்கினை குறைத்தல் – ரந்தியகம வென்னப்புவ | ரூ. 625,000.00 |
| திபில்ல கால்வாயினை திருத்தியமைத்தல் – சிலாபம் | ரூ. 201,062.40 |
| இரஜகஹ வத்த வீதியினை கொன்கிரீட் இடுதல் – சிலாபம் | ரூ.1,545,706.94 |

கடற்கரை அண்டிய பகுதிகளில் 36 எச்சரிக்கை பதாகைகளை பொருத்துதல்

## (9) கலாசார மற்றும் சமூக சேவைகள்

### (1) சிறுவர் பாதுகாப்பு பணிகள்

- சிறுவர் துஷ்பிரயோகங்களை குறைப்பதற்காக சமூக தலைவர்களை விழிப்பூட்டல்
- சிறுவர் துஷ்பிரயோகங்களை குறைப்பதற்காக கொரகஹயாய விஹாரையின் பங்குதாரர்களை விழிப்பூட்டல்
- சிறுவர் துஷ்பிரயோகங்களை குறைப்பதற்காக கிராமீய நடவடிக்கைகள் தொடர்பான குழுவினரை விழிப்பூட்டல்
- சிறுவர் துஷ்பிரயோகங்களை குறைப்பதற்காக சிறுவர் சபை பிரதிநிதிகளை விழிப்பூட்டல்
- சிறுவர் துஷ்பிரயோகங்களை குறைப்பதற்காக இராணுவ கழக உறுப்பினர்களை விழிப்பூட்டல்
- பாடசாலை வான் சாரதிகளை விழிப்பூட்டல்
- சிறுவர் மன்றங்களை அமைத்தல்
- சிறுவர் முகாம்களை நடாத்துதல்

### (2) சமூக பாதுகாப்பு பணிகள்

சமூக பாதுகாப்பு சபையின் 2012ம் ஆண்டின் முன்னேற்ற அறிக்கை பின்வருமாறு

| | | |
|---|---|---|
| • புதிய உருப்பினர்களை சேர்த்துக்கொள்ளல் | - | 2, 945 |
| • ஓய்வூதியம் பெற்றுக் கொண்டவர்களின் எண்ணிக்கை | - | 184 |
| • ஓய்வூதியத்தின் அளவு | - | 92, 000/- |
| • நட்ட ஈட்டுத் தொகையினை பெற்றுக்கொண்ணடவர்களின் எண்ணிக்கை | - | 10 |
| • நட்ட ஈட்டுத்தொகை | - | 217, 905/- |

### (3) சமூக சேவைகள் தொடர்பான பணிகள்

| | |
|---|---|
| ➢ வீட்டு மட்டத்தில் இருந்து சீர்திருத்த பணிகளை ஆரம்பித்த எண்ணிக்கை | 198 |
| ➢ சமூகத்திற்குள் உள்வாங்கப்படுதல் | 212 |
| ➢ முன்பள்ளியில் வழிகாட்டப்பட்ட எண்ணிக்கை | 66 |
| ➢ சாதாரன பாடசாலைகளுக்கு வழிகாட்டப்பட்ட எண்ணிக்கை | 55 |
| ➢ விசேட பாடசாலைகளுக்கு வழிகாட்டப்பட்ட எண்ணிக்கை | 745 |
| ➢ சிகிட்சைகளுக்காக வழிகாட்டப்பட்ட எண்ணிக்கை | 120 |
| ➢ தொழிற்பயிற்சிகளுக்காக வழிகாட்டப்பட்ட எண்ணிக்கை | 93 |
| ➢ தொழில்களுக்காக வழிகாட்டப்பட்ட எண்ணிக்கை | 227 |
| ➢ சுய தொழில் துறைக்கு வழிகாட்டப்பட்ட எண்ணிக்கை | 1, 550 |
| ➢ உதவித்தொகை வழங்கப்பட்ட எண்ணிக்கை | 187 |
| ➢ வீடுகள் கட்டுவதற்கான உதவிகள் வழங்கப்பட்ட எண்ணிக்கை | 231 |
| ➢ தொண்டர் ஊழியர்களுக்கு நடாத்தப்பட்ட கூட்டங்கள் | 530 |
| ➢ உதவிகள் வழங்கும் குழு கூட்டம் | 148 |
| ➢ செயற்பாட்டுக் குழு கூட்டம் | 1, 163 |
| ➢ கிராமிய குழு கூட்டம் | 112 |
| ➢ உத்தியோகத்தர்களை விழிப்பூட்டல் | 145 |
| ➢ பெற்றோர்களை விழிப்பூட்டல் | |

### (4) சமய, கலாசார பணிகள்

- ➢ நாட்டிற்கும், தேசத்திற்கு பாதுகாப்புத் துறைகளுக்கு ஆசி வேண்டி ஆணமடுவ வடத்த ශ්‍රී சரனங்கர பிரிவெனாவில் ஒரு வார கால மத வழிபாடுகளை மேற்கொள்ளல்.
- ➢ நாட்டிற்கும், தேசத்திற்கு பாதுகாப்புத் துறைகளுக்கு ஆசி வேண்டி அராச்சிகட்டுவ கருக்குளிய ஜயதிலகாராமயவில் ஒரு வார கால மத வழிபாடுகளை மேற்கொள்ளல்.

## அபிவிருத்தி பணிகள்.

மாவட்ட செயலகத்தின் அபிவிருத்தி பணிகளானது அக்காரியாலயத்தின் அபிவிருத்தி பகுதியினால் மேற்கொள்ளப்படுகிறது. இது மாவட்ட பொறியியளாலரின் கீழ் இயங்குகிறது. 2010 ஆம் ஆண்டு மாவட்ட செயலகத்தின் நிர்மாண பணிகள் ஆரம்பிக்கப்பட்டதுடன் 2012 ஆம் ஆண்டு அதன் மீதி பணிகள் மேற்கொள்ளப்பட்டது. மேலும் இரண்டு பிரதேச செயலகங்களும் அமைக்கப்பட்டது.

| அலுவலகம் | மதிப்பீட்டுத் தொகை | 2012 – செலவு |
|---|---|---|
| மாவட்ட செயலகம் | 300,000,000.00 | 36,180,486.00 |
| நாத்தாண்டி பி.செ | 9,046,000.00 | 4,018,441.00 |
| ஆராச்சிகட்டுவ பி.செ | 14,418,000.00 | 4,446,874.00 |

2012 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட மாவட்ட செயலத்தினதும் ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களின் செலவுகள் பற்றிய விபரங்கள் பக்கம் 20 – 22 ல் காட்டபடபட்டுள்ளது.

## வருடாந்த கணக்குகள்

2012 ஆம் ஆண்டு செயற்பாட்டு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் மாவட்ட செயலகத்தினதும் மற்றும் பிரதேச செயலகங்களினதும் செலவின விபரங்கள் அவ் அவ் திட்டங்களின் கீழ் டீ.ஜீ.எஸ்.ஏ.2,3,4,5 ஆகிய அட்டவணைகளின் மூலம் காட்டப்பட்டுள்ளது. முற்பண கணக்குகள் மற்றும் வைப்புக் கணக்குகளின் ஆரம்ப நிலுவை, வருடத்தினுள் மேற்கொள்ளப்பட்ட வரவு மற்றும் செலவுகள் பற்றிய விபரங்கள் குறிப்பு ii ன் மூலமும் கட்டுநிதி தொடர்பான விபரங்கள் குறிப்பு iii ன் மூலமும் காட்டப்பட்டுள்ளது.

### நிகழ்ச்சித்திட்ட ரீதியான ஒதுக்கீட்டுக் கணக்கு - 2012

**செலவின தலைப்பு இலக்கம் - 273**

**அமைச்சு/திணைக்களம்/மாவட்ட செயலகம் - மாவட்ட செயலகம், புத்தளம்**

**நிகழ்ச்சித்திட்ட இலக்கமும் தலைப்பும் - செயல்முறை செயலற்பாடுகள்**

### மீண்டு வரும் மற்றும் மூலதன செலவினத்தின் பொழிப்பு - 2012

| டீஜீஎஸ்ஏ படிவத்தில் குறிப்பிட்ட செலவினத்தின் தன்மை | (1) வரவு செலவு மதிப்பீட்டில் உள்ள ஒதுக்கீடு | (2) குறை நிரப்பு ஏற்பாடும் குறை நிரப்பு மதிப்பீட்டு ஒதுக்கமும் | (3) நி.பி.66 மற்றும் நி.பி 69ற்கு ஏற்ப மாற்றீடு | (4) மொத்த தேறிய ஏற்பாடு (1-2)+3+4 | (5) மொத்த செலவினம் | (6) தேறிய விளைவு சேமிப்பு / மிகை (1+3+4)-6 | பக்க இல (உரிய டீஜீஎஸ்ஏ 2 படிவத்தை இணைக்குக) |
|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | |
| (அ) மீண்டுவரும் ( டீஜீஎஸ்ஏ 3 ) | 378,500,000 | 65,234,726 | 11,800,000 | 443,734,726 | 439,171,060 | 4,563,666 | 3 |
| | | | (11,800,000) | | | | |
| (ஆ) மூலதன ( டீஜீஎஸ்ஏ 4) | 102,200,000 | - | 4,500,000 | 102,200,000 | 62,756,282 | 39,443,718 | 4 |
| | | | (4,500,000) | | | | |
| மொத்தம் | 480,700,000 | 65,234,726 | - | 545,934,726 | 501,927,342 | 44,007,384 | |

**கருத்திட்ட ரீதியான மீண்டுவரும் செலவினம்**

**செலவின தலைப்பு இலக்கம் - 273**

**அமைச்சு/திணைக்களம்/மாவட்ட செயலகம் - மாவட்ட செயலகம், புத்தளம்**

**நிகழ்ச்சித்திட்ட இலக்கமும் தலைப்பும் - செயல்முறை செயலற்பாடுகள்**

| கருத்திட்ட இலக்கம் தலைப்பு மற்றும வேதனாதிகள், அனைத்து கறுத்திட்டங்களுக்குமான அறவீடுகள் | (1) வரவு செலவு மதிப்பீட்டில் உள்ள ஒதுக்கீடு | (2) குறை நிரப்பு ஏற்பாடும் குறை நிரப்பு மதிப்பீட்டு ஒதுக்கமும் (+/-) | (3) நி.பி.66 மற்றும் நி.பி 69ற்கு ஏற்ப மாற்றீடு (+/-) | (4) மொத்த தேறிய ஏற்பாடு (1+2+3) | (5) மொத்த செலவினம் | (6) தேறிய விளைவு சேமிப்பு / மிகை (4-5) |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கருத்திட்ட இலக்க தலைப்பு | | | | | | |
| 01.பொதுநிர்வாகமும் தாபனச் சேவைகளும் | | | | | | |
| மாவட்ட செயலகம் புத்தளம் | | | | | | |
| ஆளுக்குரிய வேதனாதிகள் | 18,800,000 | 56,978,679 | - | 75,778,679 | 75,298,224 | 480,455 |
| ஏனைய செலவீனங்கள் | 9,325,000 | - | - | 9,325,000 | 8,241,016 | 1,083,984 |
| **உப மொத்தம்** | **28,125,000** | **56,978,679** | | **85,103,679** | **83,539,240** | **1,564,439** |
| **கருத்திட்ட இலக்க தலைப்பு** | | | | | | |
| 02.பிரதேச செயலகம் | | | | | | |
| ஆளுக்குரிய வேதனாதிகள் | 311,500,000 | 8,256,047 | 11,000,000 | 319,756,047 | 319,178,716 | 577,331 |
| | | | (11,000,000) | | | |
| ஏனைய செலவீனங்கள் | 38,875,000 | - | 800,000 | 38,875,000 | 36,453,104 | 2,421,896 |
| | | | (800,000) | | | |
| **உப மொத்தம்** | **350,375,000** | **8,256,047** | **-** | **358,631,047** | **355,631,820** | **2,999,227** |
| **கருத்திட்டம் - 01** | 28,125.000 | 56,978,679 | - | 85,103,679 | 83,539,240 | 1,564,439 |
| **கருத்திட்டம் - 02** | 350,375,000 | 8,256,047 | - | 358,631,047 | 355,631,820 | 2,999,227 |
| **மொத்த தொகை** | **3,788,500.000** | **65,234,726** | **-** | **443,734,726** | **439,171,060** | **4,563,666** |

டீஜீஎஸ்ஏ-4

## கருத்திட்ட ரீதியான மூலதன செலவு

**செலவின தலைப்பு இலக்கம் - 273**

**அமைச்சு/திணைக்களம்/மாவட்ட செயலகம் - மாவட்ட செயலகம், புத்தளம்**

**நிகழ்ச்சித்திட்ட இலக்கமும் தலைப்பும் - செயல்முறை செயலற்பாடுகள்**

**கருத்திட்ட இலக்க தலைப்பு - 1,2**

| விடயக் குறியீடு | விடய இலக்கம | நிதிப்படுத்தல் குறியீடு | விடயங்கள் சம்பந்தமான விபரம் | வரவு செலவு மதிப்பீட்டில் உள்ள ஒதுக்கீடு | குறை நிரப்பு ஏற்பாடும் குறை நிரப்பு மதிப்பீட்டு ஒதுக்கமும் | மொத்த தேறிய ஏற்பாடு (1+2+3) | மொத்த செலவினம் | தேறிய விளைவு சேமிப்பு / மிகை (1+3)-5 |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | (1) | (4) | (5) | (6) | (6) |
| | | | | &gh | &gh | &gh | &gh | &gh |
| | | | மூலதனச் சொத்துக்கள் புனர்நிர்மானமும் மேம்பாடும் | | | | | |
| 2001 | | 11 | கட்டடம் | 4,000,000 | 4,500,000 | 8,500,000 | 5,010,466 | 3,489,534 |
| 2002 | | 11 | இயந்திரம் இயந்திரோபகரணங்கள் | 500,000 | - | 500,000 | 166,935 | 333,065 |
| 2003 | | 11 | வாகனங்கள் | 1,000,000 | | 1,000,000 | 958,519 | 41,481 |
| | | | **உப மொத்தம்** | **5,500,000** | **4,500,000** | **10,000,000** | **6,135,920** | **3,864,080** |
| | | | மூலதன சொத்துக்களின் பெறுகை | | | | | |
| 2102 | | 11 | வீட்டுத் தளபாடம் மற்றும் உபகரணங்கள் | 5,000,000 | - | 5,000,000 | 1,667,412 | 3,332,588 |
| 2013 | | 11 | இயந்திரம் மற்றும் இயந்திரோபகரணங்கள் | 1,000,000 | - | 1,000,000 | 287,146 | 712,854 |
| 2104 | | 11 | கட்டடங்கள் | 90,000,000 | (4,500,000) | 85,500,000 | 54,011,528 | 31,488,472 |
| | | | **உப மொத்தம்** | **96,000,000** | **(4,500,000)** | **91,500,000** | **55,966,086** | **35,533,914** |
| | | | திறன் விருத்தி | | | | | |
| 2401 | | 11 | பயிற்சியளிப்பு | 400,000 | - | 400,000 | 354,276 | 45,724 |
| | | | **உப மொத்தம் ;** | 400,000 | - | 400,000 | 354,276 | **45,724** |
| - | | | **கருத்திட்டம் 01ன் மொத்தம்** | **101,900,000** | - | **101,900,000** | **62,456,282** | **39,443,718** |
| | | | திறன் விருத்தி | | | | | |
| 2401 | | 11 | பயிற்சியளிப்பு | 400,000 | - | 400,000 | 354,276 | 45,724 |
| | | | **உப மொத்தம்** | **400,000** | - | **400,000** | **354,276** | **45,724** |
| | | | **கருத்திட்டம் 02ன் மொத்தம்** | **400,000** | - | **400,000** | **354,276** | **45,724** |
| | | | **கருத்திட்டம் 01ன் மற்றும் 02ன் மொத்தம்** | **102,200.000** | - | **102,200.000** | **62,756,282** | **39,443,718** |

## நிகழ்ச்சித் திட்ட ரீதியான செலவினத்தை நிதிப்படுத்தலின் பொழிப்பு

### ( மீண்டுவரும் மற்றும் மூலதன செலவினங்களின் கூட்டுத் தொகை )

**செலவின தலைப்பு இலக்கம் - 273**

**அமைச்சு/திணைக்களம்/மாவட்ட செயலகம் - மாவட்ட செயலகம், புத்தளம்**

| நிதிப்படுத்தல் | | நிகழ்ச்சித்திட்டம்; 01 | | நிகழ்ச்சித்திட்டம்; 02 | | மொத்தம் | | செலவின வீதம் (6/5)x100 |
|---|---|---|---|---|---|---|---|---|
| குறியீடு | மூலம் | தேறிய ஏற்பாடு | உண்மைச் செலவினம் | தேறிய ஏற்பாடு | உண்மைச் செலவினம் | தேறிய ஏற்பாடு | உண்மைச் செலவினம் | |
| | | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | % |
| 11 | உள்நாட்டு நிதி | 545,934,726 | 501,927,342 | - | - | 545,934,726 | 501,927,342 | 91.94% |
| 12 | வெளிநாட்டு உதவி ( கடன் ) | | | | | | | |
| 13 | வெளிநாட்டு உதவி ( மானியம் ) | | | | | | | |
| 14 | மீள் செலுத்த வேண்டிய வெளிநாட்டு உதவி (கடன் ) | | | | | | | |
| 15 | மீள் செலுத்த வேண்டிய வெளிநாட்டு உதவி (மானியம்) | | | | | | | |
| 16 | எதிர்மறை நிதி | | | | | | | |
| 17 | வெளிநாட்டு உதவியுடன் தொடர்பான உள்நாட்டு நிதி | | | | | | | |
| 21 | விசேட சட்ட சேவைகள் | | | | | | | |
| | **மொத்தம்** | 545,934,726 | 501,927,342 | - | - | 545,934,726 | 501,927,342 | 91.94% |

குறிப்பு - (ii)

## முற்பண மற்றும் வைப்புக் கணக்குகளுக்கான கட்டுப்பாட்டு கணக்குகள் பற்றிய பொழிப்பு - 2012

செலவின தலைப்பு இலக்கம் –273 அமைச்சு/திணைக்களம்/மாவட்ட செயலகம் – மாவட்ட செயலகம், புத்தளம்

| | | திணைக்கள புத்தகத்திற்கேற்றப | | | | |
|---|---|---|---|---|---|---|
| முற்பண / வைப்புக் கணக்கின் பெயர் | கணக்கு இலக்கம் | 2012.01.01 அன்று உள்ளவாறான கணக்கு மீதி | ஆண்டின் வரவுகள் | ஆணடின் செலவுகள் | 2012.12.31 அன்று உள்ளவாறான கணக்கு மீதி | 2012.12.31 அன்று உள்ளவாறான திறைசேறி கணக்கு மீதி |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| I அரச ஊழியர்களுக்கான முற்பணம் | 273011 | 149,033,060.81 | 33,037,076.08 | 36,842,108.06 | 145,228,028.83 | 145,228,028.83 |
| | 273012 | | 13,291,823.23 | 17,455,996.55 | 4,164,173.32 | 4,164,173.32 |
| II. ஏனைய முற்பணங்கள் | | 149,033,060.81 | 46,328,899.31 | 54,298,104.61 | 141,063,855.51 | 141,063,855.51 |
| III. நானாவித முற்பணங்கள் | | | | | | |
| IV. வைப்புக் கணக்குகள் | | | | | | |
| i. பொது வைப்புக்கள் | 6003/0000/00/0019/0000/000 | | | | | |
| ii. ஏனைய வைப்புக்கள் | 6003/0000/00/0049/0000/000 | 142,241,288.99 | 205,183,556.28 | 328,484,393.60 | 265,542,126.31 | 265,542,126.31 |

நி.பி 506(2) க்கு இணங்க மேற் குறிப்பிட்ட முற்பணக் கணக்கு மற்றும்; வைப்புக் கணக்குகளில் உள்ள மீதிகள் அவற்றுக்குரிய தனித் தனி கணக்குகளுடன் இணக்கம் செய்யப்பட்டுள்ளது எனவும் > கணக்கிணக்க அறிக்கை கணக்காய்வாளர் அதிபதிக்கு அனுப்பப் பட்டுள்ளது எனவும் இத்தால் அத்தாட்சிப்படுத்திகின்றேன்.

குறிப்பு - (iii)

### கட்டுநிதி கணக்கின் மீதான பொழிப்பு அறிக்கை - 2012

**செலவின தலைப்பு இலக்கம் –273**

**அமைச்சு/திணைக்களம்/மாவட்ட செயலகம் – மாவட்ட செயலகம், புத்தளம்**

| கணக்கு இல. | திணைக்கள புத்தகத்திற்கு ஏற்ப | | | | 2012.12.31 அன்றுள்ளவாறு திறைசேறி புத்தக மீதி |
|---|---|---|---|---|---|
| | 2012.01.01 அன்றுக்குள்ளவாறு ஆரம்ப வீதி (ரூபா) | குறித்த வருடத்தின் போது மொத்த பற்று | குறித்த வருடத்தின் போது மொத்த வரவு | 2012.12.31 அன்றுள்ளவாறு இறுதி மீதி | |
| | (ரூபா) | (ரூபா) | (ரூபா) | (ரூபா) | (ரூபா) |
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 7002/0/0/312/11 | | 3,815,093,565.18 | 3,815,093,565.18 | | |
| | | | | | |

1. மேலே 5ற்கும் 6ற்கும் இடையேயான வித்தியாசத்திற்கான காரணத்தை தயவு செய்து கூறுக
   1. திறைசேறிக்கு அனுப்பப்பட்ட ஆனால் சீர்செய்யப்படாத்து. (31.12.2012 உள்ளவாரான காசு புத்தக மீதி)
   2. ஏனைய காரணங்கள் ……………………..

……………………..

3. மேலே 5ல் காட்டப்படுள்ள மீதியினை பின்வருமாறு விபரிக்குக
   1. தீர்க்கப்படாத உப கட்டுநிதிகள் ( முற்பணம் உற்பட )
   2. மாதாந்த பொழிப்பினைத் தயாரிக்கையில் ஏதேனும் தவறுகள் ஏற்பட்டிருப்பின் …………………

……………………..

இந்த மீதிகள் அறிக்கையில் ஒப்பமிடும் திகதியாகும் போது தீர்க்கக்கப்பட்டிருப்பின் அது பற்றியும் இல்லயெனில் தீர்க்கப்படாமைக்கான காரணம் என்பவற்றினைக் குறிப்பிடவும்.

ஆணமடுவ பிரதேச செயலாளரின் வெளிநாட்டு பயன முற்பணக் கொடுப்பணவு

**மேற் கூறி தகவல்கல் சரியானதென்றும் உண்மையானதென்றும் உறுதிப்படுத்துகிறேன்.**